★ இனத் தாக்குதலுக்கு எதிராக

## தென்மராட்சி மாணவர் மாபெரும் ஊர்வலம்

ஸ்ரீலங்கா இராணுவத்தின் இனவாத தாக்குதல் நடவடிக்கையால் பாதிக்கப்பட்டும், கொலை செய்யப்பட்டும் வரும் தமிழ் மாணவர்களின் அவலநிலையை ஆட்சேபித்து தென்மராட்சி மாணவர் அமைப்பின் மாணவர்கள் நாளையதினம்புதன் கிழமை காலை மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தவுள்ளார்கள். காலை 8மணிக்கு கொடிகாமம் சந்தையிலிருந்து ஆரம்பமாகும் இவ்வார்ப்பாட்ட ஊர்வலம் சாவகச்சேரி சந்தை மைதானத்தில் முடிவடைந்து அங்கு பொதுக் கூட்டமும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது இப் பொதுக் கூட்டத்தில் இன்றைய சூழ்நிலையில் மாணவர்கள் செயற்பாடு பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் கருத்துரை நிகழ்த்தவுள்ளார்கள். இவ்வார்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் சகல மாணவர்களையும் கொடிகாமம் சந்தை —04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 154 செவ்வாய் 17-07-1990 (ஆடி 01) துல்ஹஜ் 23

★ புலிகளை எதிர்க்க கங்கணம்; கொப்பேகடுவ தலைமை ஏற்கிறார்

# கிழக்கிலிருந்து பெருமளவு ராணுவம் இங்கு விரைவு!

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா இராணுவப் படைகள் இப்போது வடக்கு நோக்கிப் பெரும் எண்ணிக்கையில் விரைவதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

வடமராட்சியில் லிபறேசன் ஒப்பறேசன் நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்ட ஜெனரல் கொப்பேகடுவ இப்புதிய நடவடிக்கையின் தலைமைப்பொறுப்பினை ஏற்றுக் கொள்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொக்காவிலில் ஏற்பட்ட தோல்வி தொடர்ந்தும் இடம் பெறக்கூடாது என்பதில் ஜெனரல் கொப்பேகடுவ மிகவிழிப்புடன் இருப்பதாகவும் நேற்று இரவு பி. பி. ஸி தெரிவித்தது.

வடக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை மிக உக்கிர கதியில் முடுக்கிவிட ஸ்ரீலங்கா அரசு உறுதியான முடிவு எடுத்துள்ள —04 ஆம் பக்கம் பார்க்க

## கடைசிப்புலியை பிடிக்கும் வரை போர் என ரஞ்சன் 'சபதம்'

''விடுதலைப்புலிகள் இருக்கும் ஓரிடமேனும் விட்டுவைக்கப்பட மாட்டாது. அவர்கள் பிடிக்கப்படுவர் என பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன சூளுரைத்துள்ளார்.

நேற்றுக்கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு 'சபதம்' எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனரல் கொப்பேகடுவ —04 ஆம் பக்கம் பார்க்க

## ஜனக்கூட்டம் மீதே அவர்கள் 'கண்'
## நேற்று எவ். எம் பிரதான உரையாடல்

நேற்று யாழ் நகரப்பகுதியையும் மற்றும் அயல் கிராமங்களையும் உலுக்கிய ஹெலி விமானத் தாக்குதல் தொடர்பான இருபகுதிச்சம்பாஷனை பற்றி எவ் எம் அலைவரிசையில் கேட்கக்கூடியதாக இருந்தது.

''மமதியனக்க தேறுனுவதா? மொக்கத கெறன்ன? (நான் சொல்வது புரிகிறதா? என்ன நிகழ்கிறது) என்று ஓர் குரல் உச்சஸ்தாயியில் கேட்கிறது.

''ஓ.கே'' ஆங்கிலத்தில் பதில் அளிக்கப்படுகிறது.

''ஹெலி கியாத? எகொல்லத்தக்க பொட்டக் கத்தாக் கொறண்ட (ஹெலி போய் விட்டதா? அவர்களுடன் சற்றே பேசவேண்டும்) பதில் தெளிவில்லை.

' ஒப்பிண் கிறவுட்டக்தெக்கத? (பகிரங்க கூட்டத்தைக் கண்டதா?)

அடுத்து ''அப்பி யனவா பாய், பாய்'' என்ற குரல் (ஸ்ரீ)

## உணவுப் பொருட்கள்: செயலக வட்டார தகவல்

யாழ். மாவட்டத்திற்கு தேவையான உணவுப் பொருட்களைப் பெறுவதற்காக 24 லொறிகள் இன்று காலை மதவாச்சி நோக்கிப் புறப்படுகின்றன இவற்றுடன் ஒரு தபால் லொறியும் செல்கின்றது.

கொழும்பில் இருந்து வரும் லொறிகளில் இருந்து மதவாச்சியில் வைத்து உணவுப் பொருட்களை ஏற்றி எதிர் வரும் வியாழக்கிழமை இந்த லொறிகள் இங்கு திரும்பும்.

19 லொறிகள் உணவுப் பொருட்களுடன் செயலக உணவுப்பகுதிக்கும் 2 லொறிகள் சர்வோதயத்திற்கும் 1 லொறி கியூடெக்குக்கும் 2 லொறிகள் செஞ்சிலுவச் சங்கத்திற்கும் உணவு மருந்து வகைகளை ஏற்றி வரும் என செயலக வட்டாரங்கள் தெரி —4 ஆம் பக்கம் பார்க்க

வடக்கில் ராணுவ குவிப்பு ஏஜென்ஸித் தகவல்

## இங்கு கையோங்க முற்படின் அங்கு கையிழக்கும் நிலையாகலாம்

கிளிநொச்சி மாங்குளம் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களின் மீது விடுதலைப் புலிகளின் தாக்குதல் அதிகரித்து வருவதையடுத்து அப்பகுதிகளுக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து மேலதிக படைகளை அனுப்பிவைக்க முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் இருந்து படைகளை வடபகுதிக்கு இடமாற்றம் செய்வதால் கிழக்குப் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகள் நடவடிக்கைகள் அதிகரிக்கலாம் என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன, ஸ்ரீ

## 410 ராணுவம் மேலுலகம் அரசு தெரிவிக்கின்றது

தகர்ந்து போயுள்ள வவுனியா' அம்பாறை பொலிஸ் நிலையங்களை மீண்டும் புனரமைத்து புதுக் கட்டிடங்கள் எழுப்ப அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை சமீபத்திய சமரின்போது 410 இராணுவத்தினரும் 13 கடற்படையினரும் கொல்லப்பட்டுள்ளதாகவும் 391 பொலிஸார் காணாமல் போய்விட்டதாகவும் மேலும் அரசு தெ.வித்துள்ளது. (ஸ்ரீ)

நிலத்தில் வீழ்ந்தாலும் மீசையில்...

## வெற்றி, தோல்வி சகஜமே கொக்காவில் குறித்து ரஞ்சன்

கொக்காவில் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதல் பற்றி பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு.ரஞ்சன்விஜயரத்ன நேற்று கொழும்பில் கருத்துத் தெரிவிக்கையில், ''போரில் வெற்றியும், தோல்வியும் சகஜமே'' எனக் கூறியதாக நேற்றிரவு வெரித்தாஸ் வனொலி அறிவித்தது.

''இந்தியாவுக்குத் தமிழர்கள் அகதிகளாகச் செல்வதனைக் கடற்படை தடுத்துள்ளது'' என்றும் அவர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ)

# 'உயிரின் உள்ளோடும் உணர்விலும் சிந்தை ஒன்றே'

''தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு உணவு, உறையுள் என்பன முக்கியமல்ல. அவர்களின் உயிரின் உள்ளோடும் உணர்வும் தமிழீழம் பற்றியதே'' என்று நேற்று கல்விபங்காடு ஞானோதயவித்தியாசாலையில் நிகழ்ந்த மண்மீட்பு நிதி நிகழ்ச்சியில் பேசுகையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு, யோகரத்தினம் (யோகி) பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ''பரந்துபட்ட போராட்டத்தில் யாருமே தப்பி ஓட முடியாது. அப்படி ஒடிப்போனவர்கள் இந்த மண்ணின் மீது வாழ்வதற்குத் தகுதியற்றவர்கள். தமிழீழமெங்கும் தற்போது ஒரு போராட்டம் வெடித்திருக்கிறது.

எமது மண்ணை மீட்க வேண்டுமானால்ஒன்று மக்கள் போராளிகளுக்கு உதவ வேண்டும். இரண்டு மக்களின் பங்களிப்பு வேண்டும். மூன்று நிதி தந்து உதவி ஊக்கமளிக்க வேண்டும்.''

எமது போராளி ஒருவன் காவலில் தனது நிலையை எடுத்துக் கொண்டால் அவனுக்கு காலை உணவு பகல் 11 மணிக்கே போகிறது. பகல் உணவு அவனுக்கு மாலையிலேயே கிடைக்கிறது. சில வேளைகளில் தலைவர் முதல் —04 ஆம் பக்கம் பார்க்க

## குண்டுவீச்சு

நேற்றுக் காலை செம்மலை அலம்பில் பகுதிகளில் குண்டு வீச்சுத்தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன அவ்ரோ விமானங்கள் நடத்திய இக்குண்டு வீச்சுதாக்குதலில் இரு பொது மக்கள் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. (03)

வெளிவிவகார அமைச்சர் எச்சரிக்கை:

# இலங்கை நிலை நீடித்தால் அதனை இந்தியா பார்த்துக்கொண்டிருக்காது

இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிரான தாக்குதல்கள் தொடர்ந்து நீடித்தால் அதனை சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது என இந்திய வெளிவிவகாரஅமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் திரு மு. கருணாநிதி நேற்று முன் தினம் காலை டில்லியில் வெளி விவகார அமைச்சர் குஜ்ராலை சந்தித்தார்.

இலங்கையில் தமிழ்ப்பகுதிகளில் தமிழருக்கு எதிரான தாக்குதல்கள் இலங்கைப் படையினரால் தினமும் அதிகரித்த அளவில் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் ஆயிரக்கணக்கான பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள், வயோதிபர்கள் அடைக்கலம் கோரி அகதிகளாக தினமும் தமிழ்நாட்டுக்கு படகுகளில் வந்து கொண்டிருக் கிறார்கள் என திரு. கருணாநிதி, குஜ்ராலிடம் அப்போது எடுத்துரைத்தார்.

இதற்கு பதிலளித்த குஜ்ரால் இலங்கையில் இப்போதைய நிலைமை தொடர்ந்து நீடித்தால் இந்தியா அதை சும்மா பார்த்துக் கொண்டிருக்காது. இதுவே இந்திய அரசின் தற்போதைய நிலைப்பாடாகும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி பிரேமதாசா இரத்தினபுரியில் இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றுகையில் 'வடக்கு, கிழக்குச் சம்பவங்கள் இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சினையாகும். வெளிநாட்டவர் எவரினதும் தலையீட்டிற்கும் அனுமதிக்க முடியாது'

'அன்னியத் தலையீடு மீண்டும் இங்கு ஏற்பட்டால் மேலும் ஒரு குழப்பத்தை அது ஏற்படுத்தும் எனத் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கி)

## மாவீரர்களின் சாந்திக்காக ...

(காவலூர்)

தமிழீழ விடுதலைப் பு[...]களுக்கும், ஸ்ரீலங்கா அர[...] படையினருக்குமிடையே நடைபெற்று வரும் யுத்த[...]தில் மரணமடைந்த போரா[...] களுடைய ஆத்மா சாந்தி[...] டைய வேண்டி தீவுப்பகுதி[...] ளிலுள்ள சகல ஆலயங்கள[...] லும் காலை 7 மணியிலிருந்து 7-10 மணிவரை தொடர் மணியோசை எழுப்பப்பட்டது. அத்துடன் ஆத்மா சாந்திப்பூசை பிரார்த்தனைகளும் இடம் பெற்றது.

(24கி)

## நாயன்மார்கட்டில் இன்று ஆராதனை

நாயன் மார்கட்டு செம்மணி வீதி வெய்யிலுகந்த பிள்ளையார் கோயிலில் விசேட ஆராதனை ஒன்று இன்றுமாலை இடம்பெறவுள்ளது.

ஆடிப்பிறப்புநாளானஇன்று நடைபெறும் இந்த விசேட ஆராதனை நாட்டில் அமைதி வேண்டி செய்யப்படுகின்றது.

(கி)

கல்வி அமைச்சர் லலித் நேற்று அறிவிப்பு:

## வடக்கு-கிழக்கில் சீரற்றநிலை இருந்தாலும் உயர்தர பரீட்சை ஒத்திவைக்கப்படாது

வடக்கு, கிழக்கில் சீரற்ற நிலை இருக்கின்ற போதிலும் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை எக்காரணம் கொண்டும் பிற் போடப்பட மாட்டாது என கல்வி உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்று அறிவித்துள்ளார்.

ஆகஸ்ட் மாதம் பத்தாம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற விண்ணப்பித்த வடக்கு, கிழக்கு பகுதி மாணவர்கள் அங்கு பரீட்சை எடுக்க முடியாத நிலை இருந்தால் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள நிலையங்களுக்குச் சென்று பரீட்சைக்குத் தோற்றலாம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

களுத்துறை மகாவித்தியாலயத்தில் நடந்த கூட்டத்தில் வைத்து அமைச்சர் லலித் இதனை அறிவித்தார்.

இதேவேளை கடந்த ஆறு மாத காலமாக தெற்கில் அமைதியற்ற நிலை நிலவுவதால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதனைக் கருத்தில் கொண்டு கேள்விப்பத்திரங்களை தயாரிக்குமாறு பரீட்சைத் திணைக்களத்திற்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அங்கு தெரிவித்துள்ளார். (கி)

## துணைப்படைப் பயிற்சி 20-ம் திகதி ஆரம்பம்

தென்மராட்சிப் பகுதியில் உள்ள மாணவர்களுக்கான துணைப்படைப் பயிற்சி இம்மாதம் இருபதாம் திகதி ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் இத்திகதி அறிவிக்கப்பட்டது.

துணைடபடைப் பயிற்சிக்கு இதுவரை பதிவு செய்யாத மாணவர்கள் உடனடியாக தென்மராட்சி மாணவர் அமைப்பு அலுவலகத்தில் தமது பெயரை பதிவு செய்து கொள்ளுமாறு தென்மராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ரஞ்சன் தெரிவித்தார். (ப-5-கி)

## காணாமல்போன விமானம் மலையுடன்மோதிசிதறியது?

சென்னையிலிருந்து - திருவனந்தபுரம் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் மர்மமான முறையில் காணாமற்போன இந்திய விமானப் படை விமானம் மலையுடன் மோதி நொருங்கியிருக்கலாம் எனக்கருதப்படுகின்றது.

ஏ. எம். 32 ரகத்தை யுடைய இந்த விமானம் ஐந்து பயணிகளுடன் நேற்று முன்தினம் காலை சென்னையிலிருந்து புறப்பட்டிருந்தது.

புறப்பட்டு சிறிது நேரத்தில் மர்மமான முறையில் காணாமற்போன இந்த விமானப்படை விமானத்துக்கு என்ன நடந்ததென இது வரை தெரியவில்லை.

எனினும் திருவனந்த புரத்திலிருந்து 30 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மலைத் தொடரில் இது மோதி விபத்துக்குள்ளாகியிருக்கலாமென பெரும்பாலும் கருதப்படுகின்றது. (கி)

## வேதனம் வழங்கப்படுகிறது

கிளிநொச்சிப் பிரதேச சபை உப அலுவலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான ஜூன்மாத வேதனம் குமரபுரம் கமநல சேவைத் திணைக்களத்தில் வைத்து வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ப-3-கி)

ரஞ்சன் சொல்கிறார்:

## 'புலிகளுக்கெதிரான போர் ஒருமாதத்தில் முடிந்து விடும்'

வடக்கு, கிழக்குப் பகுதியில் தற்பொழுது விடுதலைப் புலிகளுக்கும், அரச படையினருக்குமிடையே இடம்பெற்று வரும் மோதல் இரண்டொரு மாதங்களில் முடிந்துவிடும்.

இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன்.

விடுதலைப் புலிகளுக்கெதிரான மோதல்களில் ஈடுபடுத்துவதற்கென மலையகத் தமிழ் இளைஞர்களும் படைகளில் சேர்த்துக்கொள்ளப் படுவர். இதற்கென தோட்டப்பகுதிகளிலிருந்து ஆயிரம் பேர் இராணுவத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(கி)

## யாழ்நகர் மேல் புதிய விமானம்

நேற்றுக்காலை யாழ்.நகரின் மீது புதியரக விமானமொன்று சுற்றுவதும் ஆங்காங்கே ஓரளவு தாழப்பறந்து நோட்டமிடுவதுமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்த விமானத்தின் கீழ்ப்பகுதி ஒரு வகை மஞ்சள் நிறமுடையதாகச் காணப்பட்டது. (கி


## கொடி

அந்தத்தீவைச் சுற்றிவளைத்து விட்டனர்
கப்பல்களிலிருந்தும், விமானங்களிலிருந்தும்
ஒரு மாதமாக இடைவிடாத கடுந்தாக்குதல்!
உணவுப் பொருள்கள் காலியாகி விட்டன!

சுற்றிவளைத்து நிற்பவர்கள் ஜெர்மானியர்கள்
அவர்களை எதிர்த்துத் தமது தீவைக்காத்துப்
போராடுபவர்கள் ரஷ்யர்கள்.

''சரணடையுங்கள் !; உயிருக்கு உத்தரவாதம்''!,
என்று ஜெர்மானியத் தளபதியிடமிருந்து
செய்தி வருகிறது.

கடைசிக் குண்டும் சுடப்பட்டு விட்டது.
போரைத் தொடர்வதற்கு கைவசம்
ஒன்றுமே இல்லை. இந்நிலையில் ரஷ்ய
வீரர்கள் என்ன செய்தார்கள்?

நாளைய முரசொலியில் 'கொடி' யைத் தேடிப்
படியுங்கள்.

தான் படித்துச் சுவைத்த 'கொடி' யை
கவிஞர் சோ. ப. அவர்கள் உங்களுக்கு
அறிமுகம் செய்கிறார்.


## தவறிவிட்டது

நல்லூரிலிருந்து மந்துவில் செல்லும் வழியில் கறுப்புநிற கைப்பை ஒன்று தொலைந்து விட்டது. அடையாள அட்டை, உணவு முத்திரை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திறப்புக் கோர்வையும், 5 ஜாதகங்களும், குடும்ப அட்டையும் உள்ளன. கண்டு எடுத்து தருபவர்களுக்கு தகுந்தசன்மானம் வழங்கப்படும். தகவல்:- சு. ஜெயரட்ணம், சங்கிலி வீதி, நல்லூர்

07017

## முதலாண்டு நினைவஞ்சலி



அமரர் ஆ. மகாலிங்கசிவம்

( நில அளவையாளர் )

| உற்றார் அணைப்பில் | ஊரார் உளத்தில் |
|---|---|
| 1942 - 12 - 01 | 1989 - 07 - 17 |

நல்லவர் வல்லவர் நடுவு நிலைமையிற்
செல்பவர் சேவையே செய்யும் இயல்பினர்
வெல்பவர் மேற்கொளும் வேலை யாவுமே
கொல்பவர் குண்டெனும் கூற்றுக் கோஇரை

விளிசிட்டி,
தெல்லிப்பளை.

நண்பர்கள்

07014


## இடமாற்ற அறிவித்தல்

33, நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிவந்த திருப்பதி ரெக்ஸ் நிறுவனம் வாடிக்கையாளரின் நன்மைகருதி கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில், கொக்குவில் ற்றேட் சென்ரருக்கு முன்பாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதென்பதை அபிமான வாடிக்கையாளருக்கும், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

திருப்பதி ரெக்ஸ் Thirupathy Tex

குளப்பிட்டிச் சந்தி, கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

07018




## களஞ்சியம் இடமாற்றம்

(சங்கானை)

யாழ். நகரில் இயங்கிவந்த யாழ். சுகாதார திணைக் களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியம் தற்காலிகமாக சங்கானையிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகக் கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை அரியாலையில் செயற்பட்டு வந்த யாழ் பிரதேச மலேரியாத் தடுப்பு இயக்க அலுவலகம் கடந்த வாரம் தொடக்கம் இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலய வீதிக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (13-கி)

இராணுவ தலைமையக தகவல்:

# வடக்குத் தாக்குதலுக்கு இராணுவம் தயார்!

வடக்கெங்கும் ஏககால மும்முனைத் தாக்குதல் நடாத்த படைகள் தயாராகி விட்டதாக இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஏககாலத்தில் தாக்குதலை மேற்கொள்ள தயாராக இருக்குமாறு ஏற்கனவே வடமாகாணத்திலுள்ள படை முகாம்களுக்கு உத்தரவிடப் பட்டிருந்தது.

இதற்கமைய யுத்த ஆயத் தங்களைசம்பந்தப்பட்டபடை வீரர்கள் செய்து முடித்துள்ளனர் எனவும் இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஹெலிகப்டர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள இத்தாக்குதல் மிகவும் உத்வேகமாக மேற்கொள்ளப் படும்.

இதற்கு உதவும் வகையில் முதல் கட்டமாக நாலாயிரம் மேலதிகப் படையினர் ஏற்கனவே வடக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வடக்கிற்கு இராணுவப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மிகப் பெரிய ஏககாலத் தாக்குதலை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து பல்வேறு முகாம் அதிகாரிகள், இராணுவ யுத்த நிபுணர்கள் ஆகியோருடன் ஆலோசனை நடாத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கில் பெருமளவிலான மோதல்களில் பங்கு பற்றிய படை அதிகாரிகளைக் கொண்ட அணியொன்றை வடபகுதித் தாக்குதலுக்குத் திரட்டி எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (கி)

# கிளி., மாங்குளம் முகாம் முற்றுகை; படையை அனுப்பும் முயற்சிதோல்வி

கோட்டை இராணுவ முகாமைப்போல் கிளிநொச்சி, ஆனையிறவு, மாங்குளம் முகாம்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

மாங்குளம், கிளிநொச்சி முகாம்கள் விடுதலைப்புலிகளினால் தனிமைப்படுத்தப்பட்டு சுற்றிவளைக்கப் பட்டுள்ளதை இராணுவ தலைமையலுவலகம் ஒத்துக்கொண்டுள்ளது.

கிளிநொச்சி இராணுவ முகாம்மீது கடந்த ஆறு தினங்களாகத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்தாக்குதல், சுற்றிவளைப்பை முறியடிக்க மேலதிக இராணுவத்தினரை அனுப்ப முயற்சியெடுக்கப்பட்டதாயினும், அதுசாத்தியப் படவில்லை எனவும்இராணுவ தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை கிளிநொச்சி, மாங்குளம், ஆனையிறவு முகாம்களுக்கு மேலதிக படையினர், ஆயுதங்களை எவ்வாறு அனுப்புவது என்பதுகுறித்து வவுனியாமாவட்ட இராணுவ தலைமையகத்தில் ஆலோசனைக்கூட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது.

வடமாகாண இராணுவப் பொறுப்பாளர் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தலைமையில் நடந்த இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பலயுத்ததந்திரங்கள் பற்றியும் ஆராயப்பட்டதாகவும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (கி)

## உணவு போட்ட இரு ஹெலிகள் புலிகள் சூட்டினால் சேதம்

கோட்டைக்கு உணவு போடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த இரு விமானப்படை ஹெலிகப்டர்களின் மீது விடுதலைப்புலிகள் சுட்டதனால் அவை சிறிது சேதமுற்றுள்ளதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எப்போது இச் சம்பவம் நடைபெற்றது என அவர்கள் தெரிவிக்கவில்லை.

இதேவேளை கடந்த சில தினங்களாக கோட்டையில் உணவு போடும் நடவடிக்கைகளுக்கு ஹெலிகப்டர்கள் பயன்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது பொம்மர் விமானங்களின் மூலமே கோட்டையிலுள்ள இராணுவத்தினருக்கு உணவுப்பொதிகள் போடப்பட்டு வருகின்றன. (கி)

## இன்னுமா தூக்கம்?

இன்னுமேன் உன் கண்ணில் தூக்கம்?
எழுந்துவா! இளைஞனே!

செந்நீரை விட்டு நம் மண்ணைக் காக்க
சீறி நீ ஓடிவா!

பொன்னான நம்மண் பொலிவிழந்து போகு முன்
புலி போலப் பாய்ந்துவா!

அந்நியன் வந்தெம்மை அழிக்க விடுவதோ?
வன்னியன் மரபில் ... .. ...
வந்தவர் நாமென்றால் ... ...
இன்னுமேன் தூக்கம்?


இளைஞனே! எழுந்துவா!
உன்னன்னை வாழ்ந்த உயர்பூமி இதுவென்றால்
இன்னும் நீ உறங்குவதேன்? - விடுதலைச்
செந்தணலை மண்மீது மூட்டு ........
சீரான வீரத்தைச் சிறப்போடு காட்டு ..... .....
சிதறி உடையட்டும் ... அடிமைப்பூட்டு!

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

## தீவு சேவை நடைபெறுமா?

தற்போது வேலணையில் நிறுத்தப்பட்டுள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான இரு பஸ் வண்டிகளையும் ஊர்காவற்றுறை - அராலித்துறை, புங்குடுதீவு-அராலித்துறைக்கு சேவையில் ஈடுபடுத்தி தீவக மக்களின் போக்குவரத்து கஷ்டங்களை நீக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (24-கி)

# களம் பல கண்ட யாழ். கோட்டை (10)



இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னரும் யாழ்ப்பாணக்கோட்டை உயரதிகாரிகள் தங்கும் இடமாக விளங்கியது. ராணிமாளிகை தொடர்ந்தும் தேசாதிபதி, உயர்மன்ற நீதிபதிகள் ஆகியோர் தங்குமிடமாக விளங்கியது கொழும்பில் இருந்து வரும் அதிகாரிகள் இந்த மாளிகையில் தங்கிச்சென்றனர். இக்கோட்டையின் ஒரு பகுதிக்கட்டிடங்கள் பிரித்தானியர் காலத்தில் சிறைச்சாலையாக மாற்றப் பட்டிருந்தன.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னரும் யாழ்ப் பாணச்சிறைச்சாலையாக அவை விளங்கின.

ஆங்கிலேயர் காலத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு யாழ்ப்பாணக் கோட்டையில் தூக்கில் தொங்க விடப்பட்டு கொல்லப்பட்டனர். அதற்கென யாழ்ப் பாணக் கோட்டையின் கிழக்குப் பகுதியில் உயர் பீடக்கொத்தளத்தில் தூக்குமாட்டும் கோபுரம் அமைக்கப்பட்டது. நான்கு தூண்களும் கூரையும் கொண்ட அக்கோபுரத்தின் உச்சியில் பிணைக்கப்பட்ட வளையிலிருந்து தூக்குக்கயிறு தொங்கும். கீழே கால்கள் நிற்குமிடத்தில் தட்டுப்பலகை இடப்பட்டிருந்தது. தூக்கில் மாட்டுகின்ற தண்டனைகளை பிரித்தானியர் காலத்தில் ''அலுகோசுகள்'' எனப்பட்டவர்களே செய்தனர். ஒல்லாந்தர்காலத்தில் அலுகோசுகளாக இருந்தவர்கள் ஆபிரிக்கக் காப்பிரிகளாவர். பிரித்தானியர் காலத்தில் அவ்வேலைகளைச் செய்வதற்கு நன்கு குடித்துச் சுயஅறிவை இழக்கும் சுதேசிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்தத் தூக்குக் கம்பத்தை முற்றவெளியில் நின்று இன்றும் பார்க்கலாம். மக்கள் பார்க்கத் தக்கதாகவே குற்றவாளிகளுக்கான தூக்குத்தண்டனையை அலுகோசுகள் நிறைவேற்றினர்.

இலங்கை சுதந்திரம் பெற்றபின்னர் யாழ்ப்பாணக் கோட்டையின் ஒரு பகுதி சிறைக்கூடமாக விளங்கியது. இலங்கையின் பலபகுதிகளிலிருந்தும் கைதிகள் இங்கு கொண்டு

★ செங்கை ஆழியான்

வரப்பட்டு அடைக்கப்பட்டனர். ஊர்காவற்றுறையிலுள்ள ஹமன்ஹீல் கடற்கோட்டையும் பாரிய குற்றமிழைத்தவர்களைத் தடுத்து வைக்கும் சிறைக்கூடமாக விளங்கியது.

05, ஏப்பிரல், 1971

நள்ளிரவு, 11.30 மணி

யாழ்ப்பாண நகரம் நல்ல உறக்கத்தின் தழுவலில் ஆழ்ந்திருந்த வேளையில், யாழ்ப்பாணம் கோட்டைப் பக்கம் இருந்து துப்பாக்கிகளிலிருந்து விடுபட்ட சன்னங்கள் வெடித்துச் சிதறுகின்ற சத்தம் எழுந்தது. அமைதியான யாழ்ப்பாணத்தின் மோனத்தூக்கத்தை அத்துப்பாக்கி வெடிச்சத்தம் சிதைத்தது. ஆங்கிலேயர் காலத்திற்குப் பின்னர் அப்படியான தொடர்ச்சியான துப்பாக்கி வெடிச்சத்தத்தை யாழ்ப்பாணம் கேட்டதில்லை. சுதந்திரமடைந்ததன் பின்னர் அதுதான் முதன் முதல் தொடர்ந்து கேட்ட துப்பாக்கிச் சத்தம். அதுதான் முதன்முதல் யாழ்ப்பாணத்து மக்களின் நித்திரையைக் குழப்பிய முதல் துப்பாக்கிச் சத்தமாகும்.

அதன் பின்னர் யாழ்ப்பாண மண்ணில் இன்னமும் துப்பாக்கி வேட்டுகளின் சத்தம் ஓயவில்லை. நித்திரைக்கு ஒரு தாலாட்டு மாதிரி துப்பாக்கிவெடிச்சத்தம் அவசியம் போலாகி விட்டது, இன்று.

ஆம். யாழ்ப்பாணக்கோட்டைச் சிறைச்சாலையில் சிறைபட்டிருக்கும் தங்கள் இயக்கத்தின் மாபெருந்தலைவன் றோகன விஜயவீரவை, மீட்டுச் செல்வதற்காக தென்னிலங்கையிலிருந்து இங்கு வந்த ஜனதா விமுக்தி பெரமுன என்ற ஜே. வி. பி, இயக்கத்தினரின் மீட்புத் தாக்குதல் நடந்துகொண்டிருந்தது. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தையும், யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புகுந்து சிறைச் சாலையையும் ஜே. வி. பி. இயக்கத்தினர் முற்றுகையிட்டுத் தாக்கினர்.

அக்காலத்தில் யாழ்ப்பாணம் கோட்டைக்குள் எந்நேரமும் சர்வசாதாரணமாக உட்சென்று வரலாம். மாலைவேளைகளில் நேரம் கிடைத்தால் கோட்டை உள் மைதானத்தில் விளையாடிவிட்டுவரலாம். ஆகச் சிறைச்சாலைப் பகுதியில் மட்டும் ஜெயிலர்கள் காவலிலிருப்பார்கள்.

இலங்கைச் சுதந்திரத்தின் பின் முதன் முதல் யாழ்ப்பாணக் கோட்டைத் தாக்குதல் நடந்தது ஏன்? எதற்கு?

ஸ்ரீலங்காவில் முதலாளித்துவ ஆட்சியாளருக்கு எதிராக ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தி மக்களாட்சியை ஏற்படுத்தும் நோக்குடன் கெரில்லா யுத்தத்தை ஜனதா விமுக்திப் பெரமுன இளைஞர்களைச் சேர்த்து நடத்தியது. அதன் தலைவர் றோகன விஜயவீரவின் கோட்பாடு மிகத்தெளிவானது. இலகுவானது. ''எந்த ஒரு புரட்சியும் பாட்டாளிகளினால் ஆயுதம் எடுக்காமல் வெற்றியடைந்ததில்லை. ஆயுதப் போராட்டத்தில் முதலாளித்துவ வர்க்கம் அதிகாரத்தைச் சமாதானமாகக் கையளித்ததுமில்லை. அரச யந்திரங்கள் தாக்கப்படவேண்டும்.''

(தொடரும்)

MURASOLIE — REGISTERED AS A NEWSPAPER IN SRILANKA — 17-07-1990

## திருமலை அகதிகளுக்கு

# கிடுகு ,மரங்கள் 'பிரேமா' லொறிகளில் அனுப்புகிறார்

திருகோணமலையில் அகதிகளாக உள்ளோர் நலனுக்காக ஜனாதிபதி திரு. ஆர், பிரேமதாஸ கிடுகுகளையும் மரங்களையும் பத்து லொறிகளில் அனுப்பிவைத்துள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

சிகிச்சைக்கான மருந்து வகைகள் மற்றும் உணவுப் பொருட்களும் அங்கு அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது,

அகதிகளானோர் தத்தம் கிராமங்களில் குடியேற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. ஸ்ரீ

# வடமராட்சி மாணவர் உணர்ச்சிமிகு ஊர்வலம்

யாழ். பல்கலைக்கழக வடமராட்சி மாணவர்கள் ஒருங்கிணைந்து நடாத்திய கண்டன ஊர்வலம் ஒன்று நேற்றுக் காலை நெல்லியடி மத்திய கலலூரியில் ஆரம்பித்து பருத்தித்துறை வரை சென்று புலோலி, மந்திகை ஊடாக நெல்லியடியை வந்தடைந்தது.

இக்கண்டன ஊர்வலமானது தமிழ் பேசும் மக்கள் மீதான இன அழிப்பைக் கண்டித்தல் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவரின் நிலையைத் தெளிவுபடுத்தல் போன்ற இரு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட்டது.

அரசினது எரிபொருட் தடையை உணர்த்து முகமாக மாட்டுவண்டி கண்டன சுலோகங்களை தாங்கியவாறு முன்வர கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவரின் நிலையை தெளிவுபடுத்துவதற்குப் பொறுப்பானவர்கள் பேசாமடந்தைகளாக இருப்பதையும் கண்டித்து பல கோஷங்கள் எழுப்பப்பட்டன,

இக்கண்டன ஊர்வலத்தின் இறுதியில் நெல்லியடி மத்திய கல்லூரியில் கூட்டம்மொன்று இடம்பெற்றது. இக் கூட்டம் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவனும் வடமராட்சிப் பகுதி மாணவர்களின் செயற்குழு உறுப்பினருமான சிவதாஸ் தலைமையில் ஆரம்பமானது. 64-ஸ்ரீ

## 'நீறு பூத்த நெருப்பின் நிலையே'

# பிரதமர் பதவி பளுவே; சிங் கூறியதாக அறிவிப்பு

தற்போது இந்திய மத்திய அரசில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி இன்னமும் முழுமையாகத் தீர்ந்துவிடவில்லைஅது .நீறுபூத்த நெருப்பு போன்ற நிலையிலேயே உள்ளது என்று புதுடில்லியிலிருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன

''மத்திய அமைச்சரவையின் பல அமைச்சர்கள் திரு. சௌதால மீண்டும் ஹரியானா முதலமைச்சராக நியமிக்கப்பட்டதன் எதிரொலியாக ராஜினாமா செய்துள்ளனர். இதனால் பிரதமர் பொறுப்பில் தொடர்ந்து பணியாற்றுவதும் கடினமானதாகவே இருக்கும்'' என்று பிரதமர் திரு. வி. பி. சிங் ஜனதாதள் தலைவர் திரு, எஸ். ஆர். பொம்மையிடம் தெரிவித்ததாகவும் புதுடில்லி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

இதற்கிடையில் திரு. சிங் ராஜினாமா விவகாரம் சுமுக நிலைக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்பதற்காக பல உயர் தலைவர்கள் துணைப்பிரதமர் திரு. தேவிலால் இல்லத்திற்குச் சென்று அவர்களைச் சந்தித்து உரையாடியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ)

# அதிகார நிலை இவர்கள் விமர்சனம்

இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் தனது பதவியை ராஜினாமாச் செய்ய முன் வந்த விடயத்தை இலங்கை வானொலி 'புதுவிதமாக' விமர்சித்துள்ளது.

இது திரு. சிங்குக்கும் துணைப் பிரதமர் திரு. தேவிலாலுக்கும் இடையிலான அதிகார இழுபறிஎன அது விமர்சித்தது. (ஸ்ரீ)

### உயிரின்...

சாதாரண போராளிவரை நேரத்துக்கு உணவு இல்லாமல் தொடர்ந்து வீரத்தோடும் மானத்தோடும் போராடினோம். போராடிக் கொண்டிருக்கிறோம். தீரமும் வீரமும் மிக்க ஒரு கட்டுக்கோப்பான அமைப்பாக உலக வரலாற்றிலே வீரம் செறிந்த ஒரு ஆய்வுக்குரிய போராட்ட இயக்கமாக நாங்கள் வளர்ந்திருக்கின்றோம்.

இன்று தமிழீழத்தில் ஆட்சி நடாத்தும் ஒரு அமைப்பாக விடுதலைப்புலிகள் இயக்கம் உள்ளது.

எமது போராளிகள் உங்கள் பிள்ளைகளைப் போன்றவர்கள். அவர்களுக்கும் ஆசை பாசம் இருக்கலாம். அவைகளையெல்லாம் அவர்கள் ஒரு புறத்தில் வைத்துவிட்டு சாலவ எதிர்பார்த்து தமது மண்ணை மீட்பதற்காக அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் தியாகம் வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டியவை'' என்றார்.

மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி சித்திரா, வடபிரதேச இணக்க மன்ற அமைப்பாளர் திரு, க. செல்வநாயகம் ஆகியோரும் உரையாற்றினார்கள், (53ஸ்ரீ

### கிழக்கிலிருந்து—

தாக நேற்று அறிவிக்கப்பட்டது.

அவர்களுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தும் பொருட்டு மேலதிக இராணுவத் துருப்புக்கள் யாழ். குடாநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் தமது இராணுவ நடவடிக்கை கிழக்கில் பூர்த்திபெற்றுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

யாழ். குடாநாட்டில் வவுனியா, மாங்குளம், மன்னார், கிளிநொச்சி முகாம்களுக்கு இராணுவம் மேலதிகமாகக் குவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படித் தகவல்களை திரு. ரஞ்சன் விஜயரத்ன நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது தெரிவித்தார். (ஸ்ரீ)

# யாழ். மாவட்ட பாடசாலைகள் மூடுவதெனத் தீர்மானம்

தற்போதைய சூழ்நிலைகள் காரணமாக யாழ். மாவட்டப் பாடசாலைகள் அனைத்தையும் மூடுவதென நேற்று யாழ். கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்ற கல்வி அதிகாரிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சுமுகநிலை தோன்றியபின்னரே க. பொ. த. உயர்தரப் பரீட்சையை இலங்கை பூராக நடாத்த வேண்டுமென கல்வியமைச்சைக் கோருவதெனவும் அக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்விப்பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் கொத்தணி அதிபர்கள் தேசிய பாடசாலை அதிபர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், தனியார் பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி தீர்மானங்கள் யாழ் அரசாங்க அதிபர் ஊடாக அரசிற்கும், பரீட்சைத் திணைக்களத்திற்கும் அனுப்பப்படவுள்ளன இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழுமீண்டும் நாளை கூடுகின்றது. (3-ஸ்ரீ)

## இன்று...நாளை

யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி உயர் வகுப்பு மாணவர் அனைவரும் கல்லூரியில் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவிருக்கும் உயர் வகுப்பு மாணவர் கூட்டத்திற்கு சமுகம் அளிக்கும்படி கோரப்படுகின்னர்.

90-ம் ஆண்டிற்கான ஜீ.சி.ஈ.உ.த பரீட்சை ஒத்திவைக்கும் விடயம் தொடர்பாக தமிழ் பேசும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நல்லூர் மங்கயற்கரசி வித்தியாலையத்தில் நடைபெறவுள்ளதால் யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச பிரதிநிதிகளையும் நாளை காலை 10 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கோரப்படுகிறது.

# இந்திய ஹெலி மர்ம மறைவு

பாகிஸ்தான் எல்லைப்பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்திய விமானப்படைக் ஹெலிக்கப்டர் ஒன்று காணாமற் போயுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இந்த ஹெலிக்கப்டரில் மூன்று இராணுவ அதிகாரிகள் பயணம் செய்ததாக அறிவிக்கப்படுகின்றது, (கி)

# தாக்குதல்

நேற்று வவுனியா மாவட்டத்தில் உள்ள ஓமந்தை விளக்குவைத்தகுளம் போன்ற பகுதிகளில் ஹெலி தாக்குதலை மேற்கொண்டது.

இத்தாக்குதலின் போது சின்னையா இராஜதுரை (வயது 47) என்பவர் காயபடைந்கதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர் (03 ஸ்ரீ)

# ராணுவம் உயிர் துறப்பு

திருமலையில் உள்ள மயிலவைக்கும் கீழ் கடலுக்குமிடையில் இடம் பெற்ற விடுதலைப் புலிகள் இராணுவம் தாக்குதலில் 5 இராணுவத்தினர் பலியாகியதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன,

நேற்று இடம் பெற்ற இத்தாக்குதலின் போது இரண்டு ரீ-56 II, ஒரு ரீ-56 I, 360 றவை, 12 மகஸின், இரு ஜே. ஆர் கிரனைட் ஆகிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக இவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (03ஸ்ரீ)

### உணவுப்—

வித்தன,

அரிசி, சீனி, மா, பால்மா போன்ற அத்திவாசியப் பொருட்களுடன் இவ்லொறிகள் மூலம் கொண்டுவரப்படும். (03)

### தென்மராட்சி—

மைதானத்திற்கு வந்துசேருமாறு விடுதலைப் புலிகளின் தென்மராட்சி மாணவர் அமைப்பு வேண்டுகோள்விடுத்துள்ளது. (05-ஸ்ரீ)

### கடைசிப்புலி—

தலைமையிலான இராணுவபலம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

வவுனியா, கிளிநொச்சி, மன்னார் முதலான சில பகுதிகள் புலிகள், படைகளின் கேந்திரப் பகுதிகளாக உள்ளதாகவும்குறிப்பிடப்பட்டது. (ஸ்ரீ)

# ஊமைப் பெண்ணிடமும் கருணையற்ற பலாத்காரம்

நிலாவெளி அகதிமுகாமில் இருந்த செல்லையா, கணேஸ் ஆகிய இருவரது குடும்பங்களைச் சேர்ந்த 6 பேரை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றதாக விடுதலை புலிகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இரு 10,12 வயது சிறுமிகள் உட்பட 5 பெண்களை நிலாவெளி முகாமிலிருந்து சிங்களக் காடையர்களும். இராணுவத்தினரும் கைது செய்து முகாமுக்கு கொண்டுசென்றதாகவும் இவர்களில் ஒருவர் ஊமைப் பெண் என்றும் இவ் ஊமைப் பெண் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு காயங்களுடன் மற்றைய இரு பெண்களையும் கூட்டிக்கொண்டு தப்பி வந்ததாகவும், அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்த ஊமைப் பெண்ணை செஞ்சிலுவைச் சங்கம் பார்வையிட்டபோதும் அவருக்கு சிகிச்சையேதும் அளிக்கவில்லையென அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (03-ஸ்ரீ)

# கடித ரூபத்திலும் மோசடி

வெளிநாடுகளுக்கு கடிதம் அனுப்புவதாகக் கூறி பொது மக்களிடம் பண மோசடி செய்யும் கும்பல் ஒன்று இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு கடிதத்திற்கும் குறிப்பிட்ட அளவு பணத்தை இக் கும்பல் அறவிடுவதாகவும் அவசரமான கடிதங்களுக்கு 70 ரூபாவரை பணம் அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக் கும்பல்களினது நடமாட்டம் கிராமப்புறங்களிலே கூடுதலாக உள்ளதாகவும் இம் மோசடி மூலம் பெறப்பட்ட பலகடிதங்கள் அழிக்கப்பட்டதாகவும் சிலகடிதங்களே செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இலவசமாக அனுப்பப்பட்டதாகவும் தெரிகிறது. (03)

# முல்லைத்தீவு,மன்னார் உணவுகள் கப்பல் மூலம் கொண்டுவர முயற்சி?

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைக் கப்பல்மூலம் கொண்டு வரப்படுவதற்கானமுயற்சிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

யாழ்.மாவட்டத்திற்கு தேவையான உணவுப் பொருட்களை கப்பல் மூலம் கொண்டு வருவதற்கு அரசு தடைவிதித்து வருவது தெரிந்ததே.

கொழும்பில் மன்னார் முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு கப்பல் மூலம் உணவுப் பொருட்கள் அனுப்பும் முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

# குண்டுவீசி உணவு போடும் பட்லம் நேற்றும் நீடிப்பு

கிளிநொச்சி இராணுவ முகாமுக்கும் யாழ்.கோட்டை இராணுவ முகாமுக்கும் நேற்று உணவுப் பொட்டலம் போடும் முயற்சியில் விமானங்கள் ஈடுபட்டன.

யாழ்.கோட்டைப்பகுதியிலும் உணவுப் பொதி போடப்பட்டதுடன் குண்டு வீச்சுகளும் இடம்பெற்றன. இக்குண்டு வீச்சுகளின் போது சின்னக்கடைப் பகுதியில் உள்ள வீடுகளும் கோட்டை பகுதியை சுற்றியுள்ள கட்டிடங்களும் சேதமடைநதன.

தெற்கு புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வீசப்பட்ட குண்டு கதிரமலை என்பவரது தோட்டத்தில் விழுந்துவெடித்தது. (03)

மனதில் நிறுத்த வேண்டிய மங்கள சுப காரியங்களை காலத்தால் அழியாத கறுப்பு, வெள்ளை, கலர் கலையம்சம் நிறைந்த புகைப் படங்களாக பெற்றுக்கொள்ள ஓரேஸ்தாபனம்.

**சென்றல் ஸ்ரூடியோ**

மாம்பழம் சந்தி, அரியாலை.

வாடிக்கையாளரின் நன்மை கருதி காலை 9.00மணி முதல் பிற்பகல் 5.00மணிவரை எமது ஸ்தாபனம் சேவையாற்றுகின்றது என்பதை அறியத் தருகின்றோம். 07016

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மி பில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 17-7-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது,